பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 05 செவ்வாய்க்கிழமை 18.01.2022 கதிர் 74

**இது ரகசியம் அல்ல!**

இன்று இரண்டு ஒப்பீடுகள். ஒன்று - நீதித்துறை தொடர்பானது. மற்றது - நிர்வாகத்துறை சம்பந்தமானது.

இரண்டுமே எனது வெவ்வேறு நண்பர்கள் சுட்டிக்காட்டியவை.

முதலாவது - 2012 நவம்பர் 9, 10ஆம் திகதிகளில் பக்கம்02

# கோட்டாவுடன் அர்த்தபுஷ்டியான பேச்சுக்குக் கூட்டமைப்பு தயார்!

## காலத்தை வீணடிக்க விரும்பவில்லை; ஏமாறவும் தயாரில்லை என்று சம்பந்தன் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் நேரில் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 2

## மோடிக்கான கூட்டு ஆவணம் தூதரிடம் இன்று கையளிப்பு

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் இன்று கொழும்பில் முக்கியத்துவமிக்க சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காகத் தமிழ் பேசும் தரப்புகளின் பொது நிலைப்பாட்டைப் 2

## வாகரையில் மீன்பிடிக்கச் சென்றிருந்த தந்தையும் மகனும் சடலங்களாக மீட்பு!

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி கடலில் மீன்பிடிக்க சென்ற தந்தையும் மகனும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இருவரும் நேற்றுமுன்தினம் மாலை 4.15 மணியளவில் படகொன்றில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் நேற்று வரை கரைக்குத் திரும்பாததையடுத்து 2

## அரசைக் கவிழ்க்க எத்தனிக்காதீர்கள்; மிகவும் பொறுப்புடன் செயற்படுங்கள்

### பங்காளிகளிடம் மஹிந்த வேண்டுகோள்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசின் கரங்களாகப் பங்காளிக் கட்சிகள் உள்ளன. இந்தக் கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளில் இவர்கள் எவரும் ஈடுபடக்கூடாது.

- இவ்வாறு வலியுறுத்தினார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இது தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் கூறுகையில்,

அரசுக்குள் இருப்பவர்களுக்குக் கருத்துச் 2

## புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை இன்று ஆரம்பித்து வைப்பார் ஜனாதிபதி

### கொள்கை விளக்க உரை தொடர்பில் நாளை முதல் இரு நாட்கள் விவாதம்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தரும் நிகழ்வு அவருடைய ஆலோசனைக்கு அமைய மிகவும் எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முறை மரியாதை துப்பாக்கி வேட்டுக்கள் 9

## பல இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்றுக் காலை பல இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணிக்கும் பஸ்ஸில் போதைப்பொருள் எடுத்துச் செல்வதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி சுகுமார் சுகந்தின் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த பஸ்ஸை ஈரப்பெரியகுளம் பகுதியில் மறித்து சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அதில் பணித்த நபர் ஒருவரின் 9

## தங்கத்தை வென்ற செந்திலின் காளை



(ந.லோகதயாளன்)

மதுரை மாவட்டதிலுள்ள பாலமேட்டில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டில் இலங்கையின் மத்திய மாகாண முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டைமானின் காளை தங்க நாணயப் பரிசை வென்றது.

தமிழகத்தில் இடம்பெறும் ஜல்லிக்கட்டு காளைப் போட்டியில் பங்குகொண்ட செந்தில் 2

## தப்பியோடிய கைதி மடக்கிப் பிடிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார். துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த நபரை மீளவும் கைதுசெய்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 9

## பீற்றூட் இறக்குமதியை உடனே நிறுத்துங்கள்!

### அரசிடம் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



(ந.லோகதயாளன்)

உள்ளூர் விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் இலங்கை அரசு பாகிஸ்தானில் இருந்து பீற்றூட் இறக்குமதியை மேற்கொள்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் 9

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடந்த சம்பவம் தொடர்பானது. அப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ. அப்போது வெலிகடைச் சிறைக்குள் நடந்த கலவரத்தில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். 43 பேர் படுகாயமடைந்தனர்.

அந்த 27 கைதிகளில் எட்டுக் கைதிகளின் படுகொலைகள் தொடர்பான ட்ரயல் – அட்பார் நீதிமன்ற விசாரணை நடைபெற்றது.

அப்போது சிறைச்சாலையின் ஆணையாளராக இருந்த லஹம்வகே எமில் ரஞ்சன் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மற்றொரு குற்றவாளியாக நிறுத்தப்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவின் இன்ஸ்பெக்டர் நியோமல் மோஸஸ் ரங்கஜீவ, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படாமையால் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அந்த விடுதலைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வது குறித்துப் பாதிக்கப்பட்ட தரப்பினால் ஆலோசிக்கப்படுகின்றது. அதுவல்ல, விடயம்.

இந்த வழக்கில் கொல்லப்பட்ட கைதிகள் அனைவரும் போதைவஸ்துக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள். அல்லது அதற்காக விசாரணைகளை எதிர்கொண்டிருந்தவர்கள்.

சிறைக்குள் போதைவஸ்து மற்றும் கைத்தொலைபேசிகள் இருப்பதாக அறிந்து விசேட தேடுதல் வேட்டை நடந்த போது இடம்பெற்ற கலவரத்தின் போதே இந்தக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

1983 ஜூலையில் இதே வெலிகடையில் ஒன்றுவிட்ட ஒரு நாள் என இரண்டு தினங்கள் நடந்த கொடூரப்படுகொலையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் களுத்துறைச் சிறைப் படுகொலை, பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை என்று பல சம்பவங்களில் பல அரசியல் கைதிகள் – குறிப்பாகத் தமிழ்க் கைதிகள் – படுகொலை செய்யப்பட்டனர்.

கடைசியாக நவம்பர் 27, 2020 இல் கம்பஹா மஹர சிறையில் 11 கைதிகள் பலியாகி, 106 கைதிகள் படுகாயமுற்ற சிறைக் கலவரம் வரை விடயங்கள் அரங்கேறின.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மறுக்கப்பட்ட நீதியும், பொறுப்புக் கூறலும், போதை வஸ்துக் கைதிகள் விடயத்தில் – அவர்கள் சிங்களவர்கள் என்பதால் – நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

தமிழ் கைதிகள் படுகொலைச் சம்பவ விடயங்களில் கண்துடைப்புக்குத்தன்னும் ஒரு விசாரணை நடத்தப்படவில்லை.

இதுதான் சிங்களத்தின் நீதித்துறை.

சிங்கள நீதித்துறை தொடர்பில் இன்னொரு விடயமும் உண்டு.

மேற்படி போதைவஸ்துக் கைதிகளுக்கு எதிரான அந்த அதிரடி நடவடிக்கை – அப்போதைய ஆட்சிப் பீடத்தின் முழு ஆசீர்வாதத்துடனேயே – போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்தல் என்ற பெயரில் – முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆகவே, இப்போது மரண தண்டனைக் குற்றத்துக்கு இலக்காகியிருக்கும் முன்னாள் வெலிகடை சிறை ஆணையர் கவலைப்படத் தேவையில்லை. மிருசுவிலில் சிறுவன் உட்பட எட்டுப் பேரின் கழுத்தை அறுத்துக் கொன்ற படை அதிகாரி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை பெற்ற மாதிரி, இவருக்கும் நிச்சயம் விரைவில் பொதுமன்னிப்பும், வரவேற்பும் கிட்டும். என்ன, அதற்குக் கொஞ்சக் காலம் உள்ளே காத்திருக்க வேண்டி இருக்கும். முன்னர் சிறை ஆணையாளராக இருந்தவர், இப்போது சிறைக் கைதியாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

போதைவஸ்துக் கடத்தல் குற்றவாளிகளுக்கு இருக்கும் மனிதத்துவ உரிமைகள் நமது தமிழ் அரசியல் கைதிகளுக்குக் கிடையாது என்பதுதான் சிங்களத்தின் வெட்கம் கெட்ட நீதித்துறை பெருமையாகும்.

சரி இனி, அடுத்த ஒப்பீட்டுக்கு வருவோம். இதுவும் வேதனையான உண்மைதான். ஒரு சட்டத்தரணி என் அலுவலகத்துக்கு வந்தார். எனது நண்பர் அவர். யாழ்.செயலகத்துக்குப்போய்விட்டு, அங்கிருந்து என்னைச் சந்திக்க வந்தார்.

வந்த வரத்தில் ஒரு கேள்வி கேட்டார். "நல்லாட்சி அரசில் நான்கரை வருடங்கள் யாழ்.மாவட்ட இணைப்புக் குழுவுக்குத் தலைவர் யார்? மாவை சேனாதிராசாதானே?" – என்று ஒரு சீற்றத்துடன் கேள்வி எழுப்பினர் அவர்.

"அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்கு நினைவில் இல்லை." – என்றேன் நான்.

"ஒரு மூத்த ஊடகவியலாளர் நினைவில் வைத்திருக்கக் கூடிய விதத்தில் கூட அந்த இணைப்புக்குழு தலைவரின் பணி அமையவில்லை. அப்போது அவரிற்கு (மாவை சேனாதிராசாவிற்கு) நெருக்கமான ரணில்தான் பிரதமர். அவருக்கு நெருக்கமான மைத்திரிதான் ஜனாதிபதி. ஆனால் யாழ்.கச்சேரிக்குள் இணைப்புக் குழுத் தலைவர் எந்த ஆணியையும் புதிதாகப் பிடுங்கவில்லை. ஒன்றும் பெரிதாக நடக்கவுமில்லை. இணைப்புக்குழுக் கூட்டத்தில் வந்து 'மைக்' என்றால் மைசூர் பாகு என்ற கணக்கில் அதைப் பிடித்து விடாது அறுத்துக் கொட்டி, முழங்கியமையைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. அதிகாரிகள் கூட அப்படி ஓர் இணைப்புக்குழுத் தலைவர் இருந்தார் எனப் பொருட்படுத்தி நடக்கக்கூட இல்லை. ஆனால் இப்போது யாழ்.கச்சேரிக்கு வந்து பாருங்கள். ஒரு அதிகாரியின் மேசையில் இருந்து ஒரு துண்டுச் சீட்டு – கடிதம் – அடுத்த மேசைக்கு நகருவதற்கு இடையில் அது தொடர்பில் இணைப்புக்குழுத் தலைவர் அங்கஜன் தரப்பு என்ன கருதும் – நினைக்கும் – என அதிகாரிகள் நடுங்குகின்றனர். அதுதான் உண்மை நிலைவரம். இவ்வளவுக்கும் இன்றைய ஜனாதிபதியும், பிரதமரும் அங்கஜனுக்கு அப்படி ஒன்றும் சாதகமானவர்கள் அல்லர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் இருவரின் நல்ல புத்தகங்களில் அங்கஜனின் பெயர் இல்லை. ஆனாலும், அங்கஜனை மீறி செயலகத்தில் ஓர் அசைவும் இல்லை என்பதுதான் உண்மை. யதார்த்தம். அது சரியா, பிழையா என்பது வேறு விடயம். ஆனால் அதுதான் ஒரு வகையில் சரியான நிர்வாகம். தங்களுக்கு இணக்கமான ஜனாதிபதியையும், பிரதமரையும் வைத்துக் கொண்டே, இணைத் தலைவர் பதவியை நாலரை வருடங்களாகக் கட்டிக் கொண்டு, பெரிதாக எதையும் சாதிக்க முடியாத – சாதிக்க இலாயக்கற்ற – பிரமுகரை உங்களின் கூத்தமைப்பு ஆட்டத்துக்காக முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க முயல்வது சுத்த அரசியல் நயவஞ்சகத்தனம்" – என்று விடாமல் முழங்கித் தள்ளினார் என் நண்பர்.

நான் எந்தப் பதிலும் கூறாமல், மௌனம் பேணினேன். எந்தப் பக்கம் நிலையெடுத்தாலும் அது தவறு என்று என் மனத்துக்குப்பட்டது. ஆனாலும் ஒரு விளக்கம் சொன்னேன்.

"அப்போது ஒரு தலைவர் அல்லர். இணைத் தலைவர்களாக ஒரு சமயத்தில் ஐவர் இருந்தனர். மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன், விஜயகலா மகேஸ்வரன், முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஆளுநர் என்று பலர் இருந்தமையால் 'தனிக் கவனிப்புக்கு' இடம் இல்லாமல் இருந்திருக்கும். ஆனால் இப்போது இருவர்தான் இணைத் தலைவர்கள். ஒருவர் – அங்கஜன் இராமநாதன். மற்றவர் – ஆளுநர். அனைத்து அதிகாரிகளுடனும் அடிக்கடி முட்டுப்பட்டுத் தன்னுடைய ஆளுமையைத் தானே சிறுமைப்படுத்திக் கொள்ளும் ஆளுநர், தமக்குச் சமதையான இணைத் தலைவர் அங்கஜன் விடயத்தில் தலையிடுவதே இல்லைபோலும். அதனால்தான் அங்கஜனின் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கின்றது." – என்று விளக்கமளித்தேன் நான்.

வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

– மின்னல் –

## அரசைக் கவிழ்க்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுதந்திரம் இருக்கின்றது. அதற்காக அவர்கள் உண்மைக்கு மாறான கருத்துக்களை வெளியிடக்கூடாது. அவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அரசுக்குள் இருக்கும் ஒரு சிலர் வெளியிடும் விமர்சனங்களை வைத்துக்கொண்டு அரசுக்குள் பெரும் பிளவு என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. எனவே, ஊடகங்களும் உண்மைகளை அறிந்து பொறுப்புணர்வுடன் செய்திகளை வெளியிட வேண்டும்.

ஊடகங்களில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு எதிரணியினரும் தத்தமது அரசியல் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர். அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம் என்று கூளுரைக்கும் சஜித் அணியினர் கடந்த ஆட்சியில் என்ன செய்தார்கள்? நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை அவர்கள் நாசமாக்கியதை மக்கள் மறக்கமாட்டார்கள். அதற்கான பதிலடிகளைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் வழங்கியுள்ளனர்.

எமது அரசு சீரான பாதையில் பயணிக்கின்றது. மக்கள் நலன் கருதி இவ்வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் – என்றார்.

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சு என்ற பெயரில் காலத்தை வீணடிக்க விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் விரைவில் முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது எனச் செய்தி வெளியாகியிருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று இரு வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை உத்தியோகபூர்வ சந்திப்பு எதையும் நடத்தவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி செயலகத்தால் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அது இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்த மாத இறுதி வாரத்தில் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந் தனிடம் வினவியபோது,

பேச்சுக்கான உத்தியோகபூர்வ அழைப்பு எமக்கு இதுவரை வரவில்லை. எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் நேரில் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது.

பேச்சு என்ற பெயரில் காலத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை. இந்த விடயத்தை, ஜனாதிபதி எம்மைப் பேச்சுக்கு அழைக்கின்றபோது நேரில் தெரிவிப்போம். அர்த்தபுஷ்டியான பேச்சுக்கு நாம் திறந்த மனதுடன் தயாராக இருக்கின்றோம்.

நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கும் வகையில் அந்தப் பேச்சு இடம்பெற வேண்டும். அதைவிடுத்து நாம் இனியும் ஏமாறத் தயாரில்லை. அனைத்துக் கருமங்களும் நல்லபடி அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம் – என்றார்.

## வாகரையில் மீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறவினரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து உயிர் பாதுகாப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் நேற்று மாலை 5 மணியளவில் தந்தை மற்றும் மகனின் சடலங்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த அனர்த்தத்தில் 56 வயதான தம்பிமுத்து திஸாநாயகம் என்பவரும், அவரது 21 வயதான மகன் திஸாநாயகம் அகிலவாசனுமே உயிரிழந்துள்ளனர்.

மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாக கொண்ட இவர்கள், காயங்கேணி – மாங்கேணி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் நீதிவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மோடிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிபலிக்கும் ஆவணம் இதன்போது கையளிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன், சமகால நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு இதன்போது, இந்தியத் தூதரக தரப்பால் கால எல்லை அறிவிக்கப்படலாம் என இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொண்டமானின் காளையை வீரர்களால் அடக்க முடியாமையால் காளை வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.

சோழன் எனப் பெயர் கொண்ட மச்சக்காளையே ஒரு பவுண் தங்க மோதிரத்தைப் பரிசாக வென்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622



# மக்களை மேலும் சுமைக்குள் தள்ள முயற்சிக்கின்றது அரசு!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு




அரசாங்கம் இந்த மக்களை மேலும் சுமைக்குள் தள்ளவே விரும்புகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பாதகமான பொருளாதார நிலைமைக்கு இந்த அரசாங்கமே பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று, அதில் சிலவற்றைத் தமது பைகளுக்குள் போட்டுகொண்டு நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்துவருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாகத் தமது அபிவிருத்தி பணிகளையே வியாபாரப்படுத்தி வருவதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

# 5 ஆவது கொரோனா அலை உருவாகும் அபாயம் உள்ளது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 18

ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக நாட்டில் ஐந்தாவது கொரோனா வைரஸ் அலை உருவாகும் அபாயம் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நீண்ட வார விடுமுறையில் இடம்பெற்ற பொதுக் கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்கள் காரணமாக அடுத்த இரண்டு வாரங்களில் நாளாந்தம் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அச்சங்கம் கூறியுள்ளது.

ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக உலகம் முழுவதும் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடாவில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை சுட்டிக்காட்டியே வைத்தியர் பிரசாத் ரணவீர இதனைக் குறிப்பிட்டார்.

ஒமிக்ரோன் மாறுபாட்டின் அதிக பரவல் தன்மை காரணமாக இலங்கையிலும் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளன என வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இருப்பினும் தடுப்பூசி நடவடிக்கை காரணமாக இலங்கையில் கொரோனாத் தொற்று மரணங்கள் குறைந்துள்ளன எனத் தெரிவித்த வைத்தியர், அனைவரும் தடுப்பூசியை செலுத்த வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

# ஜப்பானிடம் இருந்து 3.5 பில்லியன் டொலர் கடனைகோரும் இலங்கை

கொழும்பு, ஜன. 18

கடனில் மூழ்கியுள்ள இலங்கை அரசாங்கம் ஜப்பானிடம் இருந்து நிதி உதவியை பெற்றுக் கொள்வதற்கான பேச்சை ஆரம்பித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் 3.5 பில்லியன் (350 கோடி) டொலர் நிதியை பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடனை டொலராக மாற்றுவதற்கான சரியான அளவு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில் பேச்சின் முடிவைப் பொறுத்து தீர்மானம் எட்டப்படும் என மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வரலாற்று ரீதியாக இலங்கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்கும் ஜப்பான், நிதி உதவி மட்டுமல்லாமல் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகிறது.

ஜப்பானில் இருந்து பெறப்படும் கடன் ஜப்பானிய யெனில் வழங்கப்படும் என்பதோடு 0.05 சதவீத வட்டி விகிதத்தைக் கொண்டிருக்கும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டு கையிருப்பு 3.1 பில்லியன் டொலர்கள் மட்டுமே உள்ள நிலையில் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கைக்கு இந்தத் தொகை சில மாத இறக்குமதிக்கு போதுமானதாகக் காணப்படுகின்றது.

அத்தோடு ஜனவரி 18 இல் 50 கோடி டொலர் மற்றும் ஜூலையில் 100 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்துவது உட்பட, இந்த ஆண்டு 600 கோடிக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடனைத் திருப்பி செலுத்த வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

பணப்புழக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடன் வழங்கும் முகவர்களிடமிருந்து குறிப்பாக உலக வங்கி, இந்தியா மற்றும் சீனாவில் இருந்து மேலும் கடன்களைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் தீர்மானித்து பேச்சுகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழப்பது நல்லதல்ல - சஜித்

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நீதி கிடைக்காது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் உட்பட அனைவருக்கும் உச்சபட்ச தண்டனையை பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான விசாரணையின் மூலம் வழங்க தான் ஒருபோதும் தயங்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ள அவர் -

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக மக்கள் கவலைகளை எழுப்ப ஆரம்பித்துள்ளனர் எனவும் அரசாங்கத்தின் நடத்தை மற்றும் மந்தமான விசாரணைகள் இந்த கவலைகளை நிரூபித்துள்ளன எனவும் குறிப்பிட்டார். அதிகாரத்தைப் பெற ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்திய அரசாங்கம், அதையெல்லாம் மறந்து விட்டதாகத் தோன்றுகிறது என்றும் அவர் கூறினார்.

அண்மையில் தேவாலயமொன்றில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சஜித், அந்த விசாரணைகளும் மிகவும் கவலையளிக்கும் வகையில் இடம்பெற்று வருகின்றன எனவும் அது பலத்த சந்தேகங்களை எழுப்புவதாகவும் தெரிவித்தார். அரசு, பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்குகின்றமை நல்லதல்ல என்றுத் சஜித் பிரேமதாஸ கூறினார்.

# கம்பன் கலைக்கூடத்துக்கு கிளிசொச்சியில் அடிக் கல்!



கம்பன் கலைக்கூடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் சிந்தனைக்கு அமைவாக இளைஞர்களை வளப்படுத்தும் கம்பன் கலைக்கூடத்துக்கான ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோகணேசன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாணக்கியன், யாழ். மாநகர சபை மேஜர் மணிவண்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், வடமாகாண அவை தலைவர் உள்ளிட்ட பலர் வருகைதந்தனர்.

வருகை தந்திருந்த விருந்தினர்கள் விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டு வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

அதனைத்தொடர்ந்து குறித்த கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு விசாரணை முன்னெடுப்பில் அதிருப்தி!

## அனைத்து புனிதர்களின் திருச்சபை காட்டம்

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பொரளையில் உள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் விதம் தொடர்பாக அனைத்து புனிதர்களின் திருச்சபையின் பரிஷ் சபை ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையில் அமைந்துள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு வைக்க நடவடிக்கை எடுத்தவர்களின் கோழைத்தனமான மற்றும் பகுத்தறிவற்ற செயல்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக பொரளை அனைத்து புனிதர்களின் ஆலய பரிஷ் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

'18 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏராளமான மக்கள் வழிபட்டு, ஆறுதலும் அமைதியும் கண்ட இதுபோன்ற வழிபாட்டுத் தலங்களில் செய்யப்படும் இந்தச் செயல்கள், அவர்களின் பரிஷ் சமூகத்தின் உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன. அவை தேசியத்தின் வேர்களையே பாதிக்கும்.

சி.சி.டி.வி. காட்சிகளைப் பார்ப்பதற்கு முன்னதாகவே சந்தேக நபர்களைக் கைது செய்து, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸ் அனைத்து சி.சி.டி.வி. காட்சிகளையும் சரியாகக் கவனத்தில்கொள்ளாமல் நடந்துகொண்ட விதம் தொடர்பில் ஆல் செயின்ட்ஸ் சர்ச்சின் பரிஷ் சபை கவலை கொண்டுள்ளது.

சம்பவத்தன்று பிற்பகல் 3 மணிக்குப் பின்னரே சி.சி.டி.வி. காட்சிகளை பொலிஸ் கோரியது ஏன்? இந்த பின்னணியில் ஒரு பெரிய மர்மம் உள்ளது. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பொருத்தமான ஆதாரங்களை வலியுறுத்தினார். சம்பவம் நடந்த அன்று காலை சிசிடிவி காட்சிகளைப் பார்க்கும் போது இந்த சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியாகின.

இந்த விடயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறும், இந்த விசாரணைகளை அனைத்தும் நியாயமான திறமை, கவனிப்பு மற்றும் உரிய விடாமுயற்சியுடன் கையாளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளிடமும் அரசாங்கத்திடமும் மிகவும் உறுதியாகக் கேட்டுக்கொள்கிறோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜனாதிபதியின் உரை இன்று

சமகால அரசியல் வரலாற்றில் இன்றைய தினம் மிக முக்கிய நாளாக அமையக் கூடும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் அவதானிகள் மத்தியில் உண்டு.

கடந்த வருட இறுதியில் தாம் ஒத்திவைத்த நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இன்று மீளவும் கூட்டுகின்றார்.

நாடாளுமன்றத்தில் தமது அரசின் கொள்கையை விளக்கும் வகையில் ஓர் உரையை நிகழ்த்தி, கூட்டத் தொடரை அவர் ஆரம்பித்து வைக்கின்றார்.

நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்குவாரத்தில் சிக்கி நிற்கின்றது. அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை. அத்தியாவசியப் பொருள்களின் இறக்கும திக்குக் கூட வழியில்லை. எரிபொருள் இறக்குமதி இல்லாததால் மின்வெட்டு வரத் தொடங்கி விட்டது. பண வீக்கம், விலைவாசி என்று விவகாரம் கையை மீறுவது கண்கூடு.

அன்றாடம் உழைத்து உண்பவர்களை 'அன்றாடம் காய்ச்சி' என்பார்கள். அந்த நிலைமையில்தான் அரசும். அவ்வப்போது இந்தியா, சீனா, பங்களாதேசம் போன்ற நாடுகளில் இருந்து தற்காலிக கடன்கள் கிட்டினால்தான் எரிபொருளில் இருந்து எல்லா விடயங்களும் என்றாகி விட்டது. அத்தகைய மிக மோசமான கட்டத்தில் நாடு. இலங்கையின் சரித்திரத்தில் இத்தகைய கேவலமான நிலைக்கு நாடு போனதில்லை என்ற கட்டம்.

இந்த நெருக்கடிக்கு எவ்வாறு முகம் கொடுத்து இதைத் தாண்டுவது, அரசிடம் இருக்கும் மாற்றுத் திட்டம் யாது போன்றவற்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அரசின் இன்றைய கொள்கை விளக்க உரையில் வெளியிட்டாக வேண்டும். ஏதேனும் கோடி காட்டுவார் என எதிர்பார்க்கலாம்.

அரசுக் கூட்டின் இரண்டாவது பிரதான பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சி அரசுத் தலைமைக்கு எதிராக எகிறிக் கொண்டு – கறுவிக் கொண்டு – நிற்கின்றது.

இன்றைய ஜனாதிபதியின் உரையை ஒட்டி நாடாளுமன்றத்தில் நடைபெறும் இரண்டு நாள் விவாதத்தின் போது சு.க. மேலும் துள்ளிக் குதிக்கலாம். இன்றைக்கு நாடாளுமன்றம் கூடியமையை அடுத்து, எந்நேரத்திலும் கூட அதன் எம்.பிக்கள் எதிரணியில் போய் அமர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலைப்பாடுகளுக்கு எல்லாம் பதில் சொல்லும் – விளக்கமளிக்கும் – விதமாக ஜனாதிபதியின் உரை இன்று அமைய வேண்டியிருக்கும்.

சர்வதேசக் கடன் கடப்பாட்டு அடிப்படையில் தவணைக் கட்டணமாக இன்று ஐம்பது கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை அரசு செலுத்த வேண்டியிருக்கின்றது. அவசர அவசரமாக இந்தியா இலங்கைக்கு வழங்கியிருக்கும் 90 கோடி டொலரில் ஐம்பது கோடி டொலரை இன்றைய கடன் தவணைக்குச் செலுத்தி, கடனிறுக்கவக்கற்ற நாடு என்ற பெயர் வராமல் இலங்கை பார்த்துக் கொள்ளும். அதை இன்று மிதப்பாக – சாதனையாக – ஜனாதிபதி உரைக்கக் கூடும்.

ஆனால், நேரம் பார்த்து, விரைந்து உதவிய அயல் தேசமான இந்தியாவுக்கு அதற்காக கொழும்பு நன்றியாக நடந்து கொள்ளுமா, அது பற்றிய நன்றியறிதல் ஜனாதிபதியின் இன்றைய நாடாளுமன்ற அங்குரார்ப்பண உரையில் இடம்பெறுமா என்பவை நோக்கற்பாலது.

இந்திய முன்முயற்சியில் தேசிய நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறோம், மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துவோம் என்ற அறிவிப்புகள் கூட ஜனாதிபதியிடமிருந்து இன்று வரலாம் என நம்பப்படுகின்றது. பார்ப்போம் என்ன செய்தியை அவர் இன்று நாட்டின் முன் வைக்கின்றார் என்பதை.

## மைத்திரிபால தலைமையிலான சுதந்திரக் கட்சி அடுத்த தேர்தலில் தனித்து களமிறங்குகின்றது!



எதிர்வரும் தேர்தலில் தனிக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ இதனைத் தெரிவித்தார்.

ரூபா. 5ஆயிரம் மேலதிக கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளபோதும் மக்கள் தொகையில் 7 விகிதமானோர் மட்டுமே அரசுத்துறை ஊழியர்கள் என சுட்டிக் காட்டினார்.

மேலும் அரசாங்கம் தொடர்ந்து பணத்தை அச்சிட்டே 5 ஆயிரம் ரூபாவை வழங்குகின்றது என்றும் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ குற்றம் சாட்டினார்.

அதிகரித்து வரும் பொருள்களின் விலையால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் இரவு உணவை உட்கொள்வதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில் பொதுமக்கள் சுதந்திரக் கட்சியிடம் தீர்வை எதிர்பார்த்து வருகின்றனர் எனவும் அதற்காக கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## மலையக மக்களை முன்னுதாரணமாக கொண்டு நாட்டின் சிங்கள மக்கள் செயற்படுதல் வேண்டும்

### வடிவேல் சுரேஸ் இப்படிக் கூறுகிறார்

சிங்கள மக்கள், மலையக மக்களை முன்னுதாரணமாகக்கொண்டு செயற்பட வேண்டும் என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசியத் தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அன்று வாக்களித்து இன்று அரசாங்கத்தை விமர்சிக்கும் சிங்கள மக்கள் மலையக மக்களை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டு சஜித் பிரேமதாஸவை அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யவேண்டும்.

இப்போது தை பிறந்துள்ளது. நிச்சயம் வழி பிறக்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும். உங்களுக்கு வலித்தால் எமக்கும் வலிக்கும். இது தொப்புள் கொடி உறவு. இதை எவராலும் அசைக்க முடியாது.



வேதனைக்கு மத்தியில் சாதனை படைப்பதுதான் இந்த மலையக மக்கள். பெருந்தோட்டக் கம்பனிகாரர்களால் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனை மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊழலுக்கு இடமளிக்கார் என்பதால் ஜனாதிபதி மீது சேற்றை வீசுகிறார்கள்

### ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



அரசாங்கத்தில் உள்ள சிலராலும் வெளியாள்களாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விமர்சிக்கப்படுகிறார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஊழலுக்கு இடமளிக்க மாட்டார் என்பதால், ஜனாதிபதி மீது அவர்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இந்த நாட்டை ஊழலில் இருந்து விடுவிப்பதாக ஜனாதிபதி விடுத்துள்ள சபதம் அரசு தரப்பில் உள்ள சிலர் உட்பட பலரை எரிச்சலடையச் செய்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

இதனால் விரக்தி அடைந்த அவர்கள் ஜனாதிபதி மீது சேற்றை வீசுகிறார்கள் எனக் கூறிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஜனாதிபதியைத் தொடர்ந்தும் பாதுகாப்போம் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசியல் இலாபத்துக்காக அப்பாவி மக்களைக் கொலை செய்தவர்கள் சிலர் இன்னும் ஜனநாயகத்தின் வெற்றியாளர்களாக மாறுவேடமிட்டு உயிருடன் இருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்காக வரிசையில் காத்திருக்க தேவையில்லை

எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது விநியோகத்துக்குத் தேவையான எரிவாயு சிலிண்டர்கள் உள்ளமையால் மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கும் அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், இரண்டரைக் கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டர்களைப் பகிர்ந்தளிப்பதில் சிறு தாமதம் நிலவுவதாகவும் லிற்றோ எரிவாயு நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# தோட்ட வீடமைப்பு அமைச்சால் 700 கோடி ரூபா நிதி ஒதுக்கம்

## மருதபாண்டி ராமேஸ்வரன் சுட்டிக்காட்டு

தோட்ட வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்க 700 கோடி ரூபா இந்த அமைச்சின் ஊடாக செலவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ஜீவன் தொண்டமான் நினைத்திருந்தால் புதிய 700 வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கலாம். என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

புனர்நிர்மாண பணிகளுக்காக ஹற்றன் ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார், கொட்டகலை முத்து விநாயகர், பூண்டுலோயா வட்டகொட உள்ளிட்ட நான்கு ஆலயங்களுக்கு நிதி வழங்குவதற்காக கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாட்டில் பொருளாதார நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் முன்னெடுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். இந்த ஆலயம் புனர்நிர்மாண பணிகளுக்காக ஹற்றன் டிக்கோயா நகர சபைத் தலைவர் பாலச்சந்திரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கடந்த காலங்களில் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நிதி உதவியைப் பெற்றுக்கொடுத்தார்.

நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்ற போதிலும் ஆலய நிர்வாக சபை கேட்ட உடனேயே அதனை செய்து கொடுத்தார். நேற்றும் இன்றும் மாத்திரம் சுமார் 250 லட்சம் ரூபாக்களை பெற்றுக் கொடுத்துள்ளோம். அதே போன்று உங்களுக்கு தெரியும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் இந்திய உதவி தூதுவர் கோபால் பாக்லே அவர்களும் வந்திருந்தார்கள்.

இதன் போது இந்திய அரசாங்கத்தால் கட்டப்பட்ட ஆயிரம் வீடுகள் மக்கள் பயனாளிகளுக்காக கையளிக்கப்பட்டன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்களுக்கு சேவையாற்றும் போது தோட்டம் நகரம் என்று பிரித்துப் பார்க்கவில்லை.

இது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் சரி இப்போதும் சரி மக்களுக்குத் தேவையானவற்றை தேவையான நேரத்தில் பெற்றுக்கொடுத்துள்ளது இன்றைய தலைவர் ஜீவன் தொண்டமான் அவர்களும் அதனையே செய்து வருகிறார். – என்றார்.

இந்திய அரசாங்கம் ஒன்பதரை லட்சம் ரூபா ஒரு வீட்டுக்காக பெற்றுகொடுத்திருக்கிறது. இதன் உட்கட்டமைப்பு வசதிகளை நாங்களே செய்து கொடுக்க வேண்டும்.

ஹட்டன் ஆலயத்திற்கு 10 மில்லியன் ரூபா இன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் பத்து ஆலயங்களுக்கு பெற்றுக் கொடுத்தால் நூறு பேர் எம்முடன் இருப்பார்கள் ஆனால் நாங்கள் அப்படி எதிர்ப்பார்க்கவில்லை. மக்கள் எதனை எதிர்ப்பார்கிறார்களோ அதனையே நாங்கள் செய்து வருகிறோம்.

ஒரு கோடி ரூபா தேவையான விடயத்திற்கு ஒரு லட்சம் ரூபா பெற்றுக்கொடுத்தால் அந்த வேலை நிறைவு பெறாது. அமைச்சரை பொறுத்த வரையில் முழுமையாக என்ன செய்ய வேண்டுமோ அதனையே அவர் செய்வார். ஆகவே தான் பெருந்தொகை நிதியினை இந்த ஆலயத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளார் இந்த ஆலயத்தின் பணிகள் முழுமையாக நிறைவு பெற வேண்டும்.

ஏனையவர்களை போன்று அந்த கோயிலுக்கு 10 லட்சம், இந்த கோயிலுக்கு 10 லட்சம் என்று பெற்றுக்கொடுக்கும் பழக்கம் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்குமில்லை.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்குமில்லை. ஹற்றனை பொறுத்தவரையில் நாங்கள் அரசியலுக்காக நிதிகளை பெற்றுக் கொடுக்கவில்லை.

ஆகவே பெருவாரியான நிதி வரும் போது நீங்களும் எங்களுடன் இருந்து அதனை பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஹற்றன் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையிலும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கணகராஜ், பிலிப்குமார், சத்திவேல், ஹற்றன் டிக்கோயா நகர சபையின் தலைவர் பாலசந்திரன் உட்பட ஆலய பரிபாலன சபையினர் கலந்து கொண்டனர்.

# பொங்கல் மகிழ்வுடன் கொண்டாட முதலில் நாம் விழிப்படையவேண்டும்!

## சாணக்கியன் அறிவுறுத்து



பொங்கலை அடுத்த முறையாவது நாங்கள் மகிழ்வுடன் கொண்டாடவேண்டுமானால் முதலில் நாங்கள் விழிப்படைய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பிளாந்துறையில் அம்பிலாளந்துறை திசைகாட்டி மையம் நடத்திய பொங்கல் விழாவும் சாதனையாளர் கௌரவிப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பெரும்பாலான மக்களுக்கு பொங்கல் இந்தவருடம் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும். தமிழ்த் தேசிக் கூட்டமைப்பால் கறுப்புப் பொங்கல் என்ற தலைப்பிலே பொங்கல் நிகழ்வொன்றை பதுளை வீதியிலே செய்கின்றோம்.

பட்டிப்பளை பிரதேசத்தின் நிலைமை மோசமானதாக இருக்கின்றது. ஒருசிலரால் இரண்டு ஆட்டுக்குட்டிகளை கொடுத்து மக்களை திசைதிருப்புகின்ற செயற்பாடுகளை காணக் கூடியதாக இருக்கின்றன.

ஒரு சிலரால் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை தாங்கள்தான் கொண்டு வந்ததாகக்கூறி மக்களை ஏமாற்றுகின்ற செயல்களைக் காணமுடிகின்றன. மறுபக்கம் கெவிலியாமடு கச்சக்கொடி சுவாமிமலை பகுதியில் காடுகளைப் பாதுகாக்க வேண்டிய இராஜாங்க அமைச்சர் அவர்களே தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத தன்னுடைய ஆதரவாளர்கள் 500 பேரை சிவில் பாதுகாப்பு அமைப்பு என்ற பெயரிலே இங்கு கொண்டு வந்து தலா மூன்று ஏக்கர் காணிகளைக் கொடுத்து 500 பேரை இங்கு குடியமர்த்தியிருக்கின்றார்.

பொலன்னறுவை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை பிரதேசத்திலே விளைச்சல் வழமையானது போலவே இருக்கின்றது. அவர்களும் கூடியவிலை கொடுத்தே வாங்கினார்கள். ஆனால், எங்களுடைய பிரதேசத்தில் விஞ்ஞானம் இல்லாமல் போய்விட்டது. அதை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும்.

நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பசளை வேண்டும் என்று ஓர் ஆர்ப்பாட்டத்தைச் செய்திருந்தோம். மாவட்ட செயலகத்தை முடக்குமளவிற்கு ரக்டர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்தன. ஆனால் எத்தனையோ விவசாயிகள் இங்கிருந்தும் பட்டிப்பளையிலிருந்து ஒரு ட்ரக்டர்கூட வரவில்லை.

சிங்களவர்கள் போராடி எப்படியாவது பசளை எடுப்பார்கள், அப்போது எங்களுக்கும் கிடைக்கும் என்ற மனநிலை எங்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

அடுத்த முறையாவது நாங்கள் பொங்கலை மகிழ்வுடன் கொண்டாடவேண்டுமானால் முதலில் நாங்கள் விழிப்படைய வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர்கள் அறுவடை விழா

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

தைப்பூசத் தினத்துக்கு முதல் நாள் கடைப்பிடிக்கப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டு விலில் உள்ள வயலுக்குச் சென்றார்கள்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்குப் படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன.

பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தப் புதிர் விழா 288 ஆவது ஆண்டாக இந்த வருடமும் கடைப்பிடிக்கப்பட்டது.

# தரம் – 5 மாணவர் தயார்ப்படுத்தல் வகுப்புகளுக்கு இன்று முதல் தடை!

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை இருந்து பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத்தயார்ப்படுத்தும் பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளுக்கு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நள்ளிரவில் இருந்து பரீட்சைகள் நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த காலப்பகுதியில் மாதிரி வினாப் பத்திரங்களை அச்சிடுவதற்கும், விநியோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அத்துடன், உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தடை விதி முறைகளை மீறி எவரேனும் செயற்படுவார்களாயின் அது பற்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, பொலிஸ் தலைமையகத்துக்கோ, பரீட்சைகள் திணைக்களத்துக்கோ அறிவிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எல்.டி. தர்மசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்

# ஆண் ஒருவரின் சடலம் குளத்தில் இருந்து மீட்பு

ஹற்றன், சிங்கமலை குளத்திலிருந்து ஆணொருவரின் சடலத்தை நேற்று (திங்கட்கிழமை) காலை மீட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

மேற்படி சிங்கமலை பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்கள் ஹற்றன் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவர் யாரென இதுவரையில் அடையாளம் காணவில்லையென ஹற்றன் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேற்படி குளப்பகுதியில் இருந்தே ஹற்றன் நீர் வழங்கல் சபைக்கு நீர் விநியோகம் வழங்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 255

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**653.உமாமகேஸ்வரன், ஊர்மிளா, மண்டூர் மகேந்திரன், இளைஞர் பேரவை புஷ்பராஜா போன்றோருக்குக் கூறிய அந்த புத்திமதிகள் என்ன?**

ஏ.ஸி.டி சொய்சா ஆணைக்குழுவின் முன் 21 மார்ச் 78 ஆஜராகிச் சென்ற இரண்டொரு தினங்களின் பின், ஒரு திங்கட்கிழமை காலை என்று நினைப்பு, ஆணையாளர் சன்சோனி என்னையும் கந்தசாமியையும் தன்னை வந்து, பிரத்தியேகமாகச் சந்திக்குமாறு தகவல் அனுப்பியதை அடுத்து அவரைச் சந்தித்தோம். அப்பொழுது அவர், யாழ்ப்பாணத்தின் தமிழ் பொலிஸ்காரர் முக்கியமாக குருசாமி, தாமோதரம்பிள்ளை, சட்டநாதபிள்ளை, குமாரசுவாமி, ராமுபிள்ளை போன்றவர்கள் தந்த சாட்சியங்களைப் பற்றிச் சொல்லி, அவர்கள் இருதலைக் கொள்ளிஎறும்புகள் போலவும், உரலுக்கும் உலக்கைக்கும் இடையில் அகப்பட்டவர்களாகவே இந்த சாட்சியங்களை தந்திருக்கின்றார்கள், சட்டத்தரணிகளாக, அவர்கள் தந்துள்ள சாட்சியங்கள் எவ்வளவு வலுவானவை என்றும், தமிழ் மக்களது சமரப்பணங்களுக்கு ஆதரவானவை என்பதையும் நீங்கள் புரிந்திருப்பீர்கள், இவர்களில் சிலர், குருசாமியுடன் வந்து, தங்களுக்குத் தமிழ் இளைஞர்களிடமிருந்து பயமுறுத்தல் வருவதாகவும், தாங்கள் சிங்கள பொலிஸ்மாருடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகத் துரோகம் செய்ததால் பழிவாங்கலை எதிர்பார்க்குமாறு வெருட்டுதல்கள் வந்து கொண்டிருப்பதால் தன்னிடம் அவை பற்றி முறையிட்டார்கள் எனவும் தெரியப்படுத்தினார். இவை சாட்சிகளைப் பயமுறுத்துவதாகப் பார்க்கப்படலாம். உணர்ச்சிகளை விளங்கிக் கொள்கிறேன். அவர்களுக்கான பாதுகாப்பு பற்றி பொலிஸாருடன் கதைத்துள்ளேன். நீங்களும் உங்களுடைய தமிழ் தலைவர்கள் ஊடாக இவற்றைத் தெரியப்படுத்தி அவர்களுக்கு எதிராக எதுவும் நடைபெறாமல், அனுசரணையாக நடக்க அறிவுறுத்தவும் எனக் கேட்டார்.

அந்தச் சமயங்களில் முக்கியமாக குருசாமிக்கும் தாமோதரம்பிள்ளைக்கும் எதிராக அப்படியான சுவரொட்டிகள் பல வெளியிடப்படிருந்தன.

சொய்சா அப்படியான சமர்ப்பணத்தை ஆணைக்குழுவின் முன் வைக்கும் வரை, பொலிஸ் தரப்போ எந்தச் சிங்கள, பௌத்த அமைப்போ, அரசியல் கட்சியோ ஆணைக்குழுவின் முன் எதுவித சமர்ப்பணமும் எழுத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. அவை பெரும்பாலும் தமிழ் தரப்புகளிடம் இருந்துதான் பதியப்பட்டிருந்தன. ஆக ஆணைக்குழுவின் விசாரணைகள், வெளியே உள்ள தரப்புகளால், பாதுகாப்பு படையினைப் பாதுகாக்க, அவர்கள் தேசியத்தின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த செயல்பட்டார்கள் என்ற வகையில் திசைதிருப்பப்படும் என்றும், அதற்குத் தேர்தல்களில் பேசப்பட்டவைகள், இளைஞர்களின பலாத்காரம் போன்றவை பாவிக்கப்படும் என்றும் கணித்தோம்.

இவற்றையே விளங்கப்படுத்தி, ஆணைக்குழுவின் விசாரணை முடியும் வரைக்கும் புத்திசாதுரியமான வழிகளை முன்னெடுக்கும் விதத்தில் இயங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம்.

சொய்சா தொடங்கிய திருவிளையாடலை சிங்கள பிரதிநிதிகளின் சட்டத்தரணிகள் அமிர்தலிங்கத்தின் குறுக்கு விசாரணையில் தெளிவுபடுத்தினார்கள். நிதியத்துக்கும், கூட்டணிக்கும் தொடர்புகள் இல்லை என விளங்கப்படுத்தியும் – அதன் சட்டத்தரணிகள் யாரும் கூட்டணியின் அங்கத்தினர் அல்லர் எனத் தெளிவுபடுத்தியும் – கேள்விகள் அப்படியன தொடர்புகளை வலுப்படுத்தியே அமைந்தமை மட்டுமல்லாமல், நிதியம் இளைஞர்களின் பண்ணைகளுக்கும் உதவிகள் செய்வது தெரியுமா என அமிர்லிங்கத்திடம் கேட்கப்பட்டது.

தமிழ் ஈழம் கேட்ட பேச்சுக்களும், இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டியதும் தான் காரணம் என்று நிறுவுதில் அவர்கள் முனைப்பாக இருந்தார்கள். அந்த நாள்களிலும் ஆணையாளர் தான் சொய்சா பேசியவற்றை எப்பொழுதோ மறந்துவிட்டேன், அது யாழ்ப்பாணத்தில் தெளிவாக்கப்பட்டது என்ற கருத்தோட்டத்தில்தான் இருந்தார். இவற்றுக்குப் பின்னும், மீண்டும் ஆணைக்குழுவில் நடப்பதல்ல, சுற்றுப்புற அரசியலையும் மிக அவதானமாக பேணிக்கொள்ள வேண்டும் என்று அநுராதபுர அமர்வுக்கு பின்னும் அறிவுறுத்தினோம்.

சிங்கள பெரும்பான்மையின் பக்கத்தில், வெளிவரும் சாட்சியங்களால், ஆணைக்குழுவின் விசாரணைகளைத் திசை திருப்பும் முயற்சிகளும், முறியடிப்பதற்குப் பலமான அழுத்தங்களும் கொடுக்கப்பட்டன. அவற்றிற்குத் துணைபோவது போல் தமிழ் மக்களின் காரியங்களும் நடந்தேறின.

**654. அனுராதபுரத்தில் நடந்தவை என்ன?**

24 ஏப்ரல் 1978 இல் இருந்து, 29 ஏப்ரல்1978 வரை அனுராதபுரத்தில் ஆணைக்குழுவின் அமர்வு இருந்தது. நிதியத்தின் சட்டத்தரணிகள் அங்கு சென்றபோது சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பையும் சில காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளையும் எதிர்நோக்கினார்கள். தமிழருக்காகப் பாடுபடும் ஆணையாளர் என்று அவருக்கு எதிரான கூச்சல்கள், 'தமிழா, தமிழா திரும்பிப்போ!' என்ற சுவரொட்டிகள். எதிர்ப்புக்கள் யாவையுமே ஒரு பயந்த சூழ்நிலையை உருவாக்கின. சட்டத்தரணிகள் இவற்றையெடுத்து தனிப்பட்ட ரீதியில் ஆணையாளருடன் பேசினர். அவர் அரச தரப்பு சட்டத்தரணியையும் பொலிஸ் அதிகாரியையும் அழைத்து எந்தவித அசம்பாவிதங்களுக்கும் இடமளிக்கக் கூடாது எனவும், எல்லோரது பாதுகாப்பும் முக்கியம் எனவும் தெளிவுபடுத்தினார். அவருக்கும் நேரடியாகவே எழுதி அனுப்பப்பட்டிருந்த அச்சுறுத்தல் கடிதத்தை வாசித்துக் கசக்கிக் காகிதக் குப்பைக் கூடைக்குள் எறிந்துவிட்டு, இப்படியானவை என்னைப் பயமுறுத்தப் போவதில்லை என அங்கு வெளியில் நின்று கூச்சலிடுவோருக்குச் சொல்லுங்கள் என்று சொல்லப்பட்டது.

அனுராதபுரத்திலும் எந்தச் சிங்கள அமைப்புக்களோ, பௌத்த பீடங்களோ பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்தே விசாரணைகளைத் தொடர்ந்து அவதானித்து கொணடு வந்த ஒன்றிரண்டு சிங்கள சட்டத்தரணிகளும் வவுனியா பொலிஸார் சிலருக்காக சில சட்டத்தரணிகளும் ஆஜராகி சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்தார்கள். நிதியத்தின் சட்டத்தரணிகளுக்கு பயமுறுத்தல்கள், அவர்களுக்குக்கெதிரான எதிர்ப்புக்கள் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு முன்னும் பயணப் பாதைகளிலும் வன்முறையற்று பயமுறுத்தல்களாகத் தொடர்ந்தன. இவற்றால் கலவரமுற்றவர்கள் ஆணையாளருக்கு அறிவித்துவிட்டு, அமர்வுகள் முடியு முன்னே மிகுதியிருந்தவற்றைக் கவனிக்கும்படி அனுராதபுரத்திலேயே பல காலம் சட்டத்தரணியாக பணியாற்றிய சிற்றம்பலத்திடம் கையளித்து வெளியேறினார்கள்.

அதைத் தொடர்ந்து திருகோணமலை, கண்டி எனப் பொது அமர்வுகளில் தொடர்ந்து சாட்சியங்களை நெறிப்படுத்தப்பட்டன. ஒரு பக்கத்தில் இந்த சாட்சியங்கள் அரசு தரப்பு பாதுகாப்பாளர்களின் மனோபாவம், நடத்தை போன்றவற்றை சர்வதேசத்துக்கு கேள்விக் குறியாக்கி, அவற்றை எப்படிக் கையாள்வது என அவர்கள் திட்டங்கள் எடுக்க, உணர்ச்சிகளால் உந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் கட்டுப்பாடற்ற – நோக்கங்களற்ற – பழிவாங்கல்களில் ஈடுபட்டார்கள். சாட்சிகளைப் பற்றி – முக்கியமாக பொலிஸ் தரப்பு தமிழ் சாட்சிகளைப் பற்றி – அறிவுறுத்தியும் இன்ஸ்பெக்டர் குருசாமியும் தாமோதரம்பிள்ளையும் கொல்லப்பட்டனர். பின்னர் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்து, சிங்களப் பெண்ணை மணந்து, பொலிஸாருடன் நட்பாயிருந்த திலகர் கொல்லப்பட்டு அவரது பிள்ளைகள் பயமுறுத்தப்பட்டார்கள்.

இவை பற்றி விசாரித்தபோது எந்தப் போராளி குழுவும் உரிமைகோரவில்லை. தனிப்பட்ட கொலைகளாக – தமிழ் விடுதலைக்காகச் செய்யப்பட்ட பெரும் சேவையாக – பரப்புரை செய்யப்பட்டது. மக்களுக்கு இவற்றின் விவரங்கள், தாக்கங்கள் புரிந்தனவோ இல்லையோ 'பொடியங்கள்தான் இவங்களுக்குப் படிப்பிப்பாங்கள். பொடியன்கள் செய்வதுதான் அவங்களுக்கும் விளங்கும்' என்ற மனப்பான்மைதான் வளர்ந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது தலைமையேற்றுக் கண்டித்து வழிநடத்தவோ திராணியற்றவர்களாகத்தான் கூட்டணித் தலைவர்களும் இருந்தார்கள். இந்தச் சம்பவங்கள் ஆணையாளரை – சாட்சிகளைச் சந்தித்த தனி மனிதரான நீதிபதியாக அவரை – பாதிப்பதை அவரது சொல்லாடல்களிலிருந்து உணரக் கூடியதாக இருந்தது.

**655.இந்த தனிமனிதப் படுகொலைகளின் தாக்கங்களை விடுதலை கூட்டணியினர் கண்டிக்கவில்லையோ?**

சில பொது வெளிகளில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டாலும் அரசாங்க, பேரினவாத தரப்புகளிலோ பொலிஸார் விசாரணைகளின் மூலமோ அவை நம்பிக்கையானவையாகக் கருதப்படவில்லை.

இளைஞர்கள் உணர்ச்சியின் உந்தலுக்கு உட்பட்டிருந்தார்கள். அவர்களுடன் பேசியபோது விளைவுகளை – தாக்கங்களை – அவர்கள் உணர்பவர்களாக இல்லை. அவர்கள் படிப்படியான மக்கள் போராட்டமாகவும அதற்கான அரசியல் வழிமுறை பற்றியும் அறிந்து வைத்துக் கொண்டு இவற்றில் ஈடுபடவில்லை. அவர்களுக்கு இவையெல்லாம் தாக்குதல்கள்தான். தங்களது தோள்களில் புதிய ஒரு பொறுப்பு மக்களுக்காக ஏற்படுகிறது என்று மகிழ்ச்சியில் இருந்தார்கள். இவற்றுக்கு முன் பிரபாகரன், உமாமகேஸ்வரன் இணைந்திருந்த விடுதலைப் புலிகளின் மத்திய குழுக் கூட்டத்தில் அரசியல் சித்தாந்தம் பற்றி ஈராஸ் போராளிகளும் கூட்டணியுடன் தொடர்புள்ள உமா, பேபி சுப்பிரமணியமும் கூட்டணியை அரசியல் முகப்பாக பாவிக்க வேண்டும் என்று கருத்துக்களை முன்வைத்தனர் என அறிந்திருந்தோம். பிரபாகரன், ஈரோஸது சித்தாந்தங்களை நிராகரித்து, அவர்கள் என்ன கூட்டணியும் சந்தர்ப்பவாத அரசியல்தான் பேசுவார்கள், ஆதலால் அவர்களுக்குப் பின் போவதை விட்டு, தங்களது ஆயுத பலத்தைப் பெருக்கி, உள்ளே உள்ள துரோகிகளை அழித்து, தங்களைப் பலப்படுத்த வேண்டும் என்பதை தெளிவாக்கினார். இதை மத்திய குழு ஏற்றுக் கொண்டதாகவும், ஆனால் தானும் பேபி சுப்பிரமணியம் போன்றோரும் கூட்டணியில் அமிர்தலிங்கத்துடனும் மாவை சேனாதிராஜாவுடனும் இறுக்கமான தொடர்புகளைப் பேண தீர்மானித்திருப்பதாகவும், அதற்குப் பிரபாகரன் மறுப்புத் தெரிவிக்கவில்லை எனவும் உமா தெரிவித்தார். பின்னர் இவர்கள் அமிர்தலிங்கத்துடனும் மாவை சேனாதிராஜாவின் வீட்டிலும் சந்திப்புக்கள் தொடர்ந்து நடக்க இவை வேறு சில உறுப்பினர்களிடையே விமர்சனத்துக்கு வந்ததும் அவை சிறிதளவிலோ பெரிதளவிலோ பொலிஸ் புலனாய்வாளர்களுக்குச் சென்று சேர்வதும் இவை விசாரணை குழுவின் முன் குறுக்கு விசாரணைகளில் கேட்கப்படுவதும் அறிவுறுத்தப்பட்டது.

இப்படியான விமர்சனங்களை முன்வைத்தவர்களில் ஒருவர் பன்குளம் துரையப்பாவின் கொலைச் செலவுகளுக்காக தனது தங்கையின் நகைகளை அடைவு வைத்துக் கொடுத்தவர். ஆனால் இந்தக் கருத்து வேற்றுமைகள் காரணமாக மத்தியகுழுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் வேளையிலேயே பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தப் புலனாய்வுகளின் அடிப்படைகளிலேயே ஜே.ஆர். 1977 ஆம் ஆண்டு கலவரங்கள் பற்றி நாடாளுமன்றத்தில் பேசிய பொழுது பொலிஸாருக்கு எதிரான கொலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பான குழுக்களுக்கும் கூட்டணிக்கும் நேரடியான தொடர்புகள் இருப்பதால் இந்த இரு பகுதியினருமே அழிக்கப்பட வேண்டும் என்று கருத்துக்கள் வைத்தார்.

ஆனால், கூட்டணியினரோ தாங்கள் அப்படியல்லர், பொலிஸார்தான் காரணம், பெரும்பான்மைதான் காரணமானவர்கள், தாங்களோ தங்களது அரசியலோ அல்ல என்று வாதித்தனர்.

பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டிவிடுவது மாதிரி, ஆணைக்குழுவை அமைக்கிறேன், அது விசாரிக்கட்டும் என்று சொல்லிவிட்டு, பேரினவாதிகளைத் தூண்டிவிட்டு, பொலிஸார் இந்த புலனாய்வுகளை எல்லாம் அவர்களுக்குத் தர, அடிமட்டங்களை அரித்துக் கொண்டு முன்னேறினர். அவற்றுக்கு முத்தாய்ப்பு வைப்பது போல இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையினதும் அவரது குழுவினரதும் கொலைகள் மடுப்பண்ணையில் நடந்தேறின.

(வளரும்)



# தகப்பன் சாமியின் தைப்பூச திருநாள்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

எம்மைப் படைத்த பரம்பொருளை வாழ்வெல்லாம் எண்ணிட வேண்டும் என்பதற்காக எங்களின் முன்னோர்கள் விடியும் ஒவ்வொரு நாளையும் அந்தப் பரம்பொருளுக்கு உரிய நாளாகவே ஆக்கி அதற்கென்று ஒரு பெயரையும் சூட்டி பக்தியின் பாதையிலேதான் பயணித்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் வருடத்தின் இறுதி மாதமான மார்கழியைத் தெய்வத்துக்குரிய மாதமாக்கி – திருவெம்பாவை என்றும், திருப்பாவை என்றும் பக்திப் பனுவல்களை அதிகாலை வேளையிலே ஆலயத்தில் பாடிப் பரவி நின்றார்கள்.

சைவம் என்றோ, வைணவம் என்றோ பார்க்காமல் அந்தப் பரம்பொருள் புகழ்பாடும் மாதமாகவே வருடத்தின் இறுதி மாதமான மார்கழியை ஆக்கி விட்டார்கள். வருடத்தின் இறுதி மாதம் பரம்பொருளின் புகழ்பாடும் மாதமாக அமைத்த எங்கள் முன்னோர் வருடத்தின் தொடக்கத்தையும் பரம்பொருளை எண்ணி பக்திவழியிலேயே தொடங்கும் வண்ணம் ஆக்கி விட்டார்கள் என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

பூமாதேவியைத் தொட்டு ஆதவனை அகமிருத்தி பஞ்சபூதங்களையும் வணங்கி நன்றி நவிலும் முகமாகத் தைப்பொங்கல் திருநாளை வருடத்தின் தொடக்கமாகவே அமைத்த முன்னோர்களின் மகத்தான வாழ்வியல் நெறியை வியந்துதான் பார்க்கவேண்டி இருக்கின்றதல்லவா!

நட்சத்திரங்களை, நாள்களை, திதிகளை எல்லாம் மனமிருத்தி அவை ஒவ்வொன்றும் உரிய வகையில் பரம்பொருளைப் போற்றிக் கொண்டாடும் வகையில் பக்தித் திருநாளகளை ஒழுங்கமைத்த பாங்கினைப் பாராட்டியே ஆதல் வேண்டுமல்லவா! மார்கழியில் ஆதிரை நட்சத்திரத்தை சிவனுடன் இணைத்து திருவாதிரைத் திருநாள் வருகிறதல்லவா! மார்கழி மூலம் ஆஞ்ஞனேயருக்கு உரியதாக்கி அதனையும் திருநாளாக்கினார்களல்லவா! தைப்பொங்கல் தை மாதப் பிறப்பாக அமைகிறது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது மனத்தைரியத்தையும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் நல்கிறதல்லவா!

'ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய' என்பது யாவர் மனத்திலும் பதிந்திருக்கும் பெரு மந்திரம் அல்லவா! அந்த மந்திரச் சொல்லுக்கு உரித்தான தகம்பன் சாமியான முருகனுடன் தையில் வரும் பூச நட்சத்திரத்தை எங்கள் முன்னோர்கள் இணைத்திருக்கிறார்கள். பொங்கலில் பிறந்த நம்பிக்கைக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாதிருக்க வேண்டுமேயானால் அதற்குப் பெருந்துணை அந்தக் கந்தப்பெருமானே தான். ஏனென்றால் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகக் காட்சிதருபவர் எங்கள் கந்தப்பெருமானே! அந்தப் பெருமானின் திருநாளாய் மலர்வதுதான் தைப்பூச நன்னாள்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக கந்தப்பெருமான் விளங்குகின்றார். அவரது அருங்கருணையால் அனைவருக்கும் அல்லலகன்று அகமகிழ்வு ஏற்பட வழி பிறக்கும் என்று அடியார்கள் அனைவருமே பெரு நம்பிக்கையுடனேதான் இருக்கிறார்கள். அடியார் ஓரடி நடந்தால் ஆண்டவன் நூறடி வருவான். அடியார் நூறடி நடந்தால் ஆண்டவன் ஆயிரமடி வருவான் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். முருகா என்று ஒருமுறை அழைத்தால் – இம்மைக்கும் மறுமைக்கும் என்றுமே நல்லதையே முருகப்பெருமான் நல்குவான். அந்த அளவுக்கு அளப்பெரும் ஆற்றல் கொண்டவன் முருகப்பெருமான்.

இதனால்த்தான் கலியுகத்தில் எவர்வாயிலும் முதலில் வருகின்ற வார்த்தை எது தெரியுமா? ' முருகா ' என்பதேயாகும். ஓம் முருகா – ஓம்முருகா – என்று அழைக்கும் பொழுது, உள்ளமெலாம் பூரிக்கின்றது! உடலிலே ஒருவித பரவசம் உருவாகிறது! உணர்வுகள் தூய்மை அடைகின்றன. மயிலேறி அந்த மால் மருகன் நிச்சயம் வந்திடுவான். வாழ்விருக்கும் வினையனைத்தையும் வேல்கொண்டு ஒழித்திடுவான்! என்னும் தெளிவு அனைவருள்ளத்திலும் பிறக்கிறது.

அழகு, ஆற்றல், கருணை, நிரம்பிய முருகப்பெருமானுக்கு என்று பல விசேட தினங்கள் அமைந்திருக்கின்றன ஆனாலும் 'தைப்பூசம்' என்னும் திருநாள் அடியவர்களால் முருகனுக்குரிய சிறப்புத் தினமாகக் கொள்ளப்பட்டுவருகிறது என்பது நோக்கத்தக்கத்தக்கதாகும். தைமாதத்தில் பௌர்ணமியில் வருகின்ற பூச நட்சத்திரத்தன்று முருகனுக்கு உகந்த தினமாகக் கொள்ளப்பட்டு நீண்ட காலமாகத் தைப் பூசம் என்பது பெருவிழாவாக தெய்வத் திருநாளாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பது நோக்கத்தக்கது.

தைப்பூசத் திருவிழா என்பது இன்று, நேற்று, ஏற்பட்டதல்ல என்பது மனத்திருத்த வேண்டிய கருத்தெனலாம். இந்தத் திருநாளானது, எங்கள் தேவாரம் பாடிய செல்வக் குழந்தை திருஞான சம்பந்தப் பெருமானது காலம் முதல் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். அது மட்டுமன்றி பழைய இலக்கியங்களிலும் இந்த விழா பற்றி சொல்லப்பட்டிருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பல தெய்வங்கள் பற்றிய வழிபாட்டை நோக்கும் பொழுது முருக வழிபாடு என்பது மிகவும் பழைமை வாய்ந்தது என்றுதான் அறிந்த்து கொள்ள முடிகிறது. தைப்பூசம் என்னும் திருநாளோடு முருகப் பெருமான் பல நிலைகளில் இணைக்கப்படுகிறார் என்பது இங்கு கருத்திருத்த வேண்டியதேயாகும். முருகன் என்னும் நாமம்கூட மிகவும் அர்த்தம் பொதிந்தாகக் கருதப்படுகிறது. முருகு – என்றால் இளமை. முருகன் – என்றால் அழகன் என்றும் என்றுமே இளமையானவன் என்றும் கருத்துக்கள் நிறைந்தே சொல்லப்படுகின்றன.

முருகன் என்னும் பெயரை எங்களின் அன்னைத் தமிழுடன் இணைத்துப் பார்க்கும் அடியவர்களும் பலர் இந்த அவனியிலே நிறைந்திருக்கிறார்கள். அந்த வகையிலே தமிழில் காணப்படுகின்ற எழுத்துக்களை – வல்லினம், மெல்லினம் , இடையினம் என்று இலக்கணத்தார் வகைப்படுத்தியிருக்கிறார்கள். 'முருகன் ' என்னும் பெயரை உற்று நோக்கினால் அங்கே தமிழின் மூவின வகையான தன்மையும் ஒருங்கே இணைவதைக் கண்டு கொள்ளமுடியும். இதனால் முருகப் பெருமானை தமிழுடன் இணைத்துப் பேசுவார்கள். அதுமட்டுமல்ல முருகன் என்றாலே தமிழே வடிவானவன் என்னும் ஓர் எண்ணமும் மேலோங்கி நின்று முருகப்பெருமான் தமிழ் மயமாகவே விளங்குகிறார் என்று சொல்லிப் பெருமைப்படும் நிலையும் இருப்பதையும் கண்டுகொள்ளலாம்.

பசித்திருந்து , தனித்திருந்து, விழித்திருந்து, படாத வேதனை களையெல்லாம் தாங்கிக் கொண்டு – அந்தப் பரம்பொருளை நோக்கி தவமிருந்து வரம்பெற்று – அப்படிப் பெற்ற வரத்தால் பரம்பொருளின் அனுக்கிரகத்துக்கு ஆளாகி வந்தவர்கள் – பெற்ற வரத்தைப் பேணாது அதனைத் தங்களின் சுய இச்சை களுக்காகப் பயன்படுத்துவது பொருந்தக் கூடியதா? அது மட்டுமன்றி அந்த வரத்தை நல்வழியில் பயன் படுத்தாது – ஆணவத்தால் அற வழியை மறந்து தம் மனம்போன போக்கில் செயற்பட நினைந்தால் என்னாகும். முடிவில் அழிவுதானே வந்து நிற்கும். பெற்ற வரத்தைப் பேணிக் காக்காமல் மறவழியில் ஆணவத்துடன் செயற்பட்டான் சூரபதுமன். தேவர்களையே சிறைப் பிடித்தான். வரம் கொடுத்த பரம்பொரு ளையே மதியாது ஆணவத்தின் உச்சியில் ஏறி நின்றான்.

ஆணவம் எங்கு மேலோங்குகிறதோ அங்கு – வரமளித்த அந்த ஆண்டவனின் சக்தி, எப்படியோ தோன்றி மறத்தை அழித்து அறத்தை ஓங்கச்செய்யும் என்பதுதான் உண்மையாகும். அறத்தை நிலை நிறுத்த ஒரு சக்தி வெளிப்பட்டது. அந்தப் பெருஞ்சக்தி தான் 'முருகப் பெருமான்' என்னும் நிலையில் வந்தமைந்தது. ஆணவ இருளை, அகத்தை இருளை அகற்ற வேண்டுமேயானால் அங்கு ஒரு பேரொளி தோன்ற வேண்டும் அல்லவா! அந்தப் பேரொளி எப்படி அவதாரமாக அமைந்தது என்பதைக் காண்போமா!

**'அருவமும் உருவமாகி**
**அனாதியாய் பலவாய் ஒன்றாய்**
**பிரமாய் நின்றஜோதி**
**பிளம்பதோர் மேனியாகி**
**கருணைகூர் முகங்களாறும்**
**கரங்கள் பனிரெண்டும் கொண்டு**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு**
**உதித்தனன் உலகம் உய்ய '**

என்று அந்தப் பேரொளியாக முருகனது பிறப்பைப் பற்றிக் கந்தபுராணம் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது. பேரொளியாக முருகப் பெருமான் வந்த நாளாகவே தைப்பூசத் திருநாள் அமைகிறது என்பதுதான் முக்கியமாகும். இதனால் முருகப்பெருமானது ஆலயங்கள் தோறும் தைப்பூசத் திருநாள் பக்திபூர்வமாகவே கொண்டாடப்பட்டு வருகிறது என்று தைப்பூசத்துக்கும் முருகனுக்குமான தொடர்ப்பைப்பற்றி ஒரு கதை நெடுங்காலமாகவே வழக்கில் சொல்லப்பட்டு வருகிறது என்பதும் நோக்கத்தக்கது.

ஆணவத்தின் உச்சியிலிருந்து அட்டூழியம் செய்யும் அரக்கரை அழித்திட பரம்பொருளாம் சிவனால் உருவாக்கப்படுகிறார் முருகப் பெருமான். வரம் கொடுத்த தான் போகாமல் தன்னிலிருந்து வெளிப்படுத்திய சக்தியான முருகனைக் கொண்டே சரியான பாடம் புகட்டிட இறைவன் எண்ணுவதும் இங்கு நோக்கத்தக்கது. சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளியான சக்தியாய் முருகப் பெருமான் விளங்குகின்றார். பாலகனாய் இருக்கும் அவரை வரமும் உரமுமுடைய அரக்கரை அடக்கி ஆணவத்தை அழிக்க அனுப்பும் பொழுது – அவருக்கு உறுதுணையாக ஒரு பெருஞ்சக்தியாக உமையம்மன் ஒரு வேலியைப் பாலகனான முருகனுக்குக் கொடுக்கின்றார். அம்மை கொடுத்த சக்திவாய்ந்த வேல் என்னும் ஆயுதத்தால் அட்டூழியம் புரிந்த அரக்கனை வதம் செய்து முருகப் பெருமான அறமென்னும் வெற்றியைப் பெற்ற தினமாகவும் தைப்பூச விழா அமைகிறது என்று ஒரு கதையும் மரபாக வழக்கில் இருக்கிறது என்பதும் நோக்கத் தக்கதாகும்.

இதுமட்டுமல்லாமல் இன்னுமொரு கதையும் தைப் பூசத்துடன் முருகப் பெருமானை சம்பந்தப்படுத்த சொல்லப்படுவதும் நோக்கத்தக்கது. எம்பெருமான் சிவனால் பார்வதிதேவியாருக்கு மந்திரம் ஒன்று உபதேசிக்கப்படுகிறது. உபதேசிக்கும் வேளை அதனை முருகப்பெருமானானவர் மறைந்திருந்து கேட்டார் எனவும், இதனை அறிந்த பார்வதிதேவி – கோபங் கொண்டு முருகனைச் சபிக்கின்றாராம். இதனால் முருகன் கோபித்துக் கொண்டு திருப்பரங்குன்றம் சென்று அமர்ந்து விடுகிறார். முருகனின் கோபத்தை நீக்க சிவனும், பார்வதியும் முருகன் இருக்கும் இடமான திருப்பரங்குன்றம் சென்று சிவனும் , பார்வதியும் கொடுத்த சாபத்தை மீளப்பெற்று முருகனை அரவணைத்த தினமே தைப்பூசம் என்றும் ஒரு கதை வழக்கில் இருந்து வருகிறது.

கதைகள் என்னும் பொழுது அத்தனையும் பல காலமாகவே வழக்கில் நிறைந்தே வந்திருக்கின்றன. அந்தவகையிலேதான் முருகப் பெருமான் பற்றிய பலவித கதைகளும் மக்கள் மத்தியில் உருவாகி அப்படி உருவான கதைகள் அனைத்துமே ஏதோ ஒரு வகையில் தைப்பூசத்துடன் இணைக்கப்பட்டுவிட்டன என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. முருகனது அவதார தோற்றத்தைக் கந்தபுராணம் காட்டுகின்ற பொழுது 'பிரம்மாய் நின்ற ஜோதிப் பிளம்பதோர் மேனியாகி – கருணைகூர் முகங்கள் முகங்கள் ஆ றும் கரங்கள் பனிரெண்டும் கொண்டு ஒரு திருமுருகன்' வந்தான் என்று காட்டுவததைக் கருத்துவதுதான் மிகவும் முக்கியம். முருகப் பெருமான் என்னும் பொழுது அங்கே பிரகாசிக்கும் ஜோதியே வெளிப்பட்டு நிறிறது. ஜோதி என்றால் பிரகாசம் என்று தானே அர்த்தமாகிறது. தைப்புசத்தன்று பௌர்ணமி தினமாகும். பௌர்ணமி பெரு வெளிச்சம் அல்லவா! அந்தப் பெரு வெளிச்சத்துடன் பிரம்மமாய் நின்ற ஜோதியாக உதித்த முருகப் பெருமானை இணைப்பது பொருத்தமாய் இருக்கிறதல்லவா!

தை பிறந்தால் வழிபிறக்கும். தைப்பொங்கல் சூரியனுக்குரியது. சூரியன் வெப்ப மயமானவன். சூரியனுக்குரிய பொங்கலையடுத்து வருகின்ற பௌர்ணமி சிறப்புடையது. அந்தத் தினத்தில் வருகின்ற பூசமும் சிறப்புடையது. இத்தகைய காரணங்கள் தைப்பூசத்துடன் முருகப் பெருமான் இணைக்கப்பட்டது பொருத்தமாய் இருப்பதாக தெரிகிறதல்லவா ?

(08ஆம் பக்கம் பார்க்க)

# மின்சாரத்துக்கு எரிபொருளை டொலரின்றி வழங்க முடியாது!

## எரிசக்தி அமைச்சர் கை விரிப்பு



டொலர்கள் இன்றி எரிபொருளை வழங்க முடியாது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை டொலர்களை வழங்கினால் மட்டுமே மசகு எண்ணெயை இறக்குமதி செய்து வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் இல்லை என குறிப்பிட்டுள்ள அவர், தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருளை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கினால், வாகனங்களுக்கான எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் எரிபொருள் இல்லாவிட்டால் இரண்டு மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தை துண்டித்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது சாத்தியமென்றும் வாகன சாரதிகளால் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என்றும் எரிசக்தி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை மின்சார சபை தேவையான டொலர்களை வழங்கினால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கத் தயாராக இருப்பதாகவும் மின்சார சபை தாங்களாகவே நேரடியாக எரிபொருளை இறக்குமதி செய்யவும் முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் சில பகுதிகளில் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

அதனை மீளமைப்பதற்காக இரண்டு தடவைகளில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலையிலேயே, எரிசக்தி அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# நாட்டின் நலன்கள் மற்றும் எதிர்காலம் குறித்து அரசாங்கம் எந்தக் கவனமும் கொள்வதில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

இந்த அரசாங்கம் நாட்டின் நலன்கள் மற்றும் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தாமலேயே வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

பெரும்பாலான நாடுகள் உதவி வழங்கும் போது பல்வேறு நிபந்தனைகளை விதிக்கின்ற நிலையில் அரசாங்கத்திடம் கடுமையான திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் நிதி பெறுவதற்காக அல்ல ஆனால் கடுமையான வழிகாட்டுதல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இந்தியா நிதி வழங்குகிறது என கூறினார்.

குறிப்பாக இந்திய அரசியல் நிபந்தனைகளைக் கூட விதித்திருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

# தகப்பன் சாமியின்........

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பூசம் மிகவும் முக்கியத்துவம் மிக்கது என்பதற்கு – சம்பந்தப்பெருமானே தனது தேவாரத்தில் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

**'மைப்பூசும் ஒண்கண் மடநல்லூர் மாமயிலை**
**தைப்பூசும் நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒண்புகழ் நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்'**

சைவத்தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, பிரான்ஸ், கனடா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் – தமிழரல்லாத மக்கள் வாழுகின்ற கேரளப் பகுதிகளிலும்கூட தைப்பூசமானது திருநாளாகக் கொண்டாடப்படுகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

முருகப்பெருமானை முன்னிறுத்தும் தைப்பூசம் தமிழர் வாழ்வில் பல முக்கிய நிகழ்வுகளுக்கும் இடமளிக்கும் திருநாளாகவும் விளங்குகிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். வயலில் நெற்பயிர்கள் முற்றி விளைந்திருக்கும் காலமிதுவாகும். முற்றிய நெல்லிருந்து புத்தரசி எடுப்பதும் தைப்பூசத்தில் தான் என்பதும் நோக்கத்தக்கது. இதனை 'புதிரெடுத்தல்' என்று சிறப்புடன் கொண்டாடி மகிழுவதும் மனமிருத்த வேண்டியதேயாகும்.

புதிரெடுத்து புத்தரைக் கொண்டு பொங்கலிட்டு இறைவனுக்குப் படைத்து மகிழுவதும் தைப்பூச நன்னாளில் என்பதை நம்மில் பலரும் மறந்திருக்க மாட்டோம். 'புதிரெடுத்தல்' என்னும் சொல்லே மிகவும் ஆழமுடைய வாழ்வியல் தத்துவத்தை அறிவுறுத்தும் சொல்லாகும். அந்தக் கருத்தை அரங்கேற்றும் நன்னாளாய் தைப்பூசம் இருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்று சொல்லுவதை நாம் எவருமே மறப்பதேயில்லை. அதற்கான அர்த்தத்தைத் தைப்பூசத் திருநாள் நன்றாகவே நிறைத்தே வைத்திருக்கிறது. எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவருக்கு வாழ்க்கையிலே கல்வி அறிவு என்பது கட்டாயம் இருந்தே தீரவேண்டும். 'கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்' என்று ஒரு பாடசாலையில் மகுடவாசகமாய் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். இதற்குப் பல அர்த்தங்கள் இருந்தாலும் அங்கு 'கற்றிடு ' என்பதுதான் முக்கியமாய் எனக்குள் உதயமானது. அப்படிக் கற்பதற்கு உரிய பருவத்தில் கற்றலைத் தொடங்க வேண்டும். அதனைத்தான் எங்களின் முன்னோர்கள் 'வித்தியாரம்பம்' என்று வியந்து நின்றார்கள். அந்த வித்தியாரம் செய்வதற்கு உகந்த நாளாகத் தைப்பூசம் திகழ்கிறது என்பது மிகவும் முக்கியத்துவமாய் வாழ்வில் அமைகிறதல்லவா! ஆலயங்களில் வித்தியாரம்பம் நடைபெறும். வீடுகளில் நடைபெறும். தைப்பூசத்தில் வித்தியாரம்பம் என்பது மிகவும் விசேடமானது என்னும் கருத்து யாவர் மனத்திலும் பதிந்தே இருக்கிறதல்லவா!

காது குத்துதல் என்பது அழகுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்டதாகும். அதனால் தான் அக்காலத்தில் ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்குக் காது குத்துவதுபோல் குத்தினார்கள். காது குத்துதல் என்பது சுற்றஞ் சூழ இருந்து கொண்டாடி மகிழுகின்ற பெருங் கொண்டாட்ட மாகவே ஒரு காலத்தில் அமைந்திருந்தது. தாய்மாமன் மடியில் பிள்ளையினை வைத்துக் காதுகுத்துதல் என்பது மரபாகவே இருந்து வந்தது. அப்படிக் காது குத்தும் சிறப்பான குடும்ப விழாவை நடத்துவதற்கு யாவரும் காத்திருக்கும் தினம் என்ன தெரியுமா அந்த நல்ல தினந்தான் தைப்பூச நன்னாளாகும்.

தைப்பூசத்தை மனமெண்ணி காதுகுத்தக் காத்திருக்கும் சுகமோ அது ஒரு தனியான சுகமாகும். அதனைச் சொன்னால் புரியாது. அனுபவித்தவர்களுக்குத் தான் அதன் ஆனந்தம் தெரியும். காதுகுத்தலோடு தைப்பூசம் நின்றுவிடுவதில்லை. வியாபாரம் செய்பவர்கள் புதுக்கணக்கை ஆரம்பிப்பதும் தைப்பூசத்திலே தான். இந்தவகையில் பார்க்கின்ற பொழுது – சுப நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கவும், புது முயற்சிகளைத் தொடங்கவும் உவப்பான தினமாக அமைந்திருப்பது தைப்பூசத் திருநாள்தான் என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

வாழ்க்கையில் பல நல வியங்களுக்கு வழிசமைக்கும் சிறப்பான திருநாளான தைப்பூசத்தை ஆலயங்களில் பக்திபூர்வமாகக் கொண்டாடுவார்கள். முருகனுக்கு உகந்த நாளாகவே அமைகின்ற காரணத்தால் முருகப்பெருமானுக்கு உகந்த காவடிகள் பலவற்றை அடியார்கள் அவனது சந்நிதியில் எடுத்து ஆடிப் பாடி அவன் புகழ் பாடியே நிற்பார்கள். மலேசிய நாட்டில் பத்த மலை என்னும் பதியில் அமைந்திருக்கும் முருகப் பெருமானது ஆலயத்தில் சைவத்தமிழ் அடியார்களுடன் இணைந்து சீன மக்கள் பலரும் பக்தி பூர்வமாகக் காவடிஆடிவரும் காட்சி பக்திப் பரவசமாகவே அமையும். பாற்காவடி, பன்னீர் காவடி, புஷ்பக்காவடி, சந்தனக் காவடி, பறவைக்காவடி என்று அடியார்கள் வகைவகையாய் காவடிகளைத் தாங்கி ஆடலும் பாடலுமாய் இசையுடனும் தாளத்துடன் ஆடிவரும் காட்சி தைப்பூச நன்னாளை பூலோக கைலாசமாகவே மாற்றிக் காட்டி நிற்கும்.

ஆடலும், பாடலும், பக்தியுடன் அமைந்த விழாவாக தைப்பூச திருநாள் அமைகிறது என்று மட்டும் எண்ணி விடக் கூடாது. இந்த விழாவுடன் ஜோதிமயமான முருகப் பெருமானும் வந்து இணைகிறார் என்பதையும் கருத்திருத்த வேண்டும். இறைவனை 'ஒளிவளர் விளக்கே' என்கிறோம். 'மாமணிச் சோதியான்' என்கிறோம். 'சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே' என்கிறோம்.' அளம்பரும் ஜோதி ' என்கிறோம். 'தீபமங்கள ஜோதி நமோ நம' என்று பாடுகிறோம். இவையனைத்துமே இறைவனுக்கு மிகவும் பொருத்தமான இலக்கணங்களேயாகும். அந்தவகையில் முருகன் என்னும் அளப்பருந் தெய்வமும் மிகப்பெரிய ஜோதியே. அந்த ஜோதியினைக் காட்டும் பெருவிழா திருவிழா மாநிலமெங்கணும் பட்டொளி பரப்பும் பௌர்ணமி நன்னாளான தைப்பூசத் திருநாளேயாகும். பக்தியுடன், வாழ்வியலுக்கு பொருத்தமான வியங்களையும் இணைத்து நிற்கும் இந்தப் புனிதமான திருநாளுக்கு 'தகப்பன் சாமியின் திருநாள்' என்று பெயரிட்டு பெருநிறைவடைவோம் வாருங்கள்!

# சீன நன்கொடை இம்முறை அரிசி!

இலங்கைக்கு விரைவில் சீனாவில் இருந்து அரிசி, நன்கொடையாகக் கிடைக்கும் என வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

1952 ஆம் ஆண்டு இலங்கை - சீன இறப்பர், அரிசி ஒப்பந்தத்தின் 70 ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக வர்த்தக அமைச்சர், சீனத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரியுடன் அண்மையில் கலந்துரையாடினார் என அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்துக்குத் தேவையான உதவிகளை செய்து வருகிறது என்றும் வர்த்தக அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

# திருகோணமலையில் பாம்பு தீண்டி 24 வயது இளம்தாய் கவலைக்கிடம்!

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிக்குக் குட்பட்ட பகுதியில் இளம் தாயொருவருக்கு பாம்பு தீண்டியதில் கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் 24 வயதுடைய தாயொருவருக்கே பாம்பு தீண்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேராறு பகுதியில் தனது வீட்டு வளவைத் துப்புரவு பணிகள் செய்த வேளை பாம்பு தீண்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

என்ன பாம்பு தீண்டியது என்பது சரியாக தெரியாது எனவும் கால்கள் வீங்கிய நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சு.க. குறித்து முடிவொன்றை எடுத்த பின்பே அமைச்சரவை மறுசீரமைப்பு

## ஜனாதிபதி கோட்டாபய தீர்மானம்



அரசிலிருந்து வெளியேறுவதற்கான அறிகுறிகளை அதன் பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. எனவே, அக்கட்சியினர் தொடர்பில் முடிவொன்றை எடுத்த பின்னரே அமைச்சரவையை மறுசீரமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இம்மாதம் இறுதியில் இடம்பெற விருந்த அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒத்தி வைத்துள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அரசிலிருந்து வெளியேறுவதற்கான அறிகுறிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது. எனவே, அக்கட்சியினர் தொடர்பில் முடிவொன்றை எடுத்த பின்னரே அமைச்சரவை மறுசீரமைக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். புதிய கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், சுதந்திரக் கட்சியை அரசிலிருந்து வெளியேற்றுமாறு மொட்டு கட்சி தரப்பிலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அமைச்சரவை மறுசீரமைப்பு பிற்போடப்பட்டுள்ளது - என்றுள்ளது.

# உண்மையைப் பேசத் தயங்கமாட்டோம்!

## 'மொட்டு' கட்சியினருக்கு மைத்திரி பதிலடி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின்வாய்களுக்குப்பூட்டுப்போடுவதற்கு 'மொட்டு' கட் சியினர் முயற்சிக்கின்றனர். ஆனாலும், உண் மைகளைக் கதைப்பதற்கு நாம் தயங்கமாட் டோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலமடைந்து வருகின்றது. கட்சியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில், எமது வாய்களுக்குப்பூட்டுபோட்டு, சாவியை 'மொட்டு' கட்சி தலைமையகத்தில் வைப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

உண்மையை வெளிப்படையாகக் கதைப்போம். அநீதிகள் இடம்பெற்றால் அவற்றை சுட்டிக்காட்டுவோம் - என்றார்.

# 'மொட்டு'வின் பெரு வெற்றிக்கு சு.கவின் பேராதரவே காரணம்!

## நாமலுக்கு தயாசிறி பதிலடி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேராதரவு இருந்ததால்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெரும் வெற்றி பெற்றது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசின் கொள்கைகளை பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமாக வெளியேறலாம் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எவரும் தனித்துச் செயற்படுவதில் பலன் இல்லை. 2019 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 இலட்சம் வாக்குகள் தீர்மானம்மிக்கதாக இருந்தன. எனவே, எதிர்காலத்தில் ஜனாதிபதி அல்லது பிரதமராகக் காத்திருக்கும் நாமல் ராஜபக்ஷ எமது கட்சி ஆதரவு இல்லாமல் எப்படிப் பிரதமராகின்றார் எனப் பார்த்துக் கொள்வோம் என்றும் தயாசிறி குறிப்பிட்டார்.

# சங்கரிக்கு கொரோனா



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம்வீ.ஆனந்தசங்கரிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடல் சுகவீனம் காரண மாக அவருக்கு நேற்றுமுன்தினம் அன்டிஜன் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டதில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன் பி.சி. ஆர். பிரிசோதனையும் அவருக்கு நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த பரிசோதனையிலும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, அவரது குடும்ப உறுப்பினர் மற்றும் இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள், சாரதி உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வீ.ஆனந்தசங்கரியின் உடல்நிலையில் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், அவரது வயதைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலை ஒன்றில் தங்கவைக் கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாணவர்களுக்கு அநீதி இழைப்பு!

## சஜித் குற்றச்சாட்டு



பாடத்திட்டத்தை உரிய வகையில் பூர்த்தி செய்யாது, உயர்தரப் பரீட்சையை நடத்த முற்படுவது, மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹற்றனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர், பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது எவ்வாறு பரீட்சையை நடத்த முடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், கொரோனா வைரஸ் காரணமாக இணைய வழி கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், அதனைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களுக்கு பாரிய அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தன.

சிலருக்கு தொழில்நுட்ப வசதிகள் கிடைத்திருக்கவில்லை.

ஆனால், முழுமையான பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியவாறு பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களை தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது மாணவர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.

### பீற்றூட் இறக்குமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று ஊடகவிலாளர்கள் அரசின் பீற்றூட் இறக்குமதி தொடர்பில் வினவியபோதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் விவசாய அமைச்சு வேண்டுமென்றே பாக்கிஸ்தானிடமிருந்து பீற்றூட்டை இறக்குமதி செய்கின்றது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசின் விவசாய அமைச்சு வேண்டுமென்றே பாகிஸ்தானிடமிருந்து பீற்றூட்டை இறக்குமதி செய்கின்றது. இது உள்ளூர் விவசாயிகளின் வருவாயை, நன்மையைப் பாதிக்கின்ற நிகழ்ச்சியாகும்.

வழமையாக உள்ளூரில் அறுவடை ஆரம்பிக்கின்றபோது இறக்குமதிகளுக்கான வரி அதிகரிக்கப்படும். ஆனால், இந்தத் தடவை நேர்மாறாக, அதிலும் விசேடமாக யாழ்ப்பாணத்தில் பீற்றூட் அறுவடை செய்யத் தயாராகின்ற வேளையில் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

### தப்பியோடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருந்த நிலையில் அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

தப்பியோடியவர் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து குறித்த நபரைத் தேடும் பணியில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்திருந்தனர். பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டு குறித்த நபரை மீளவும் கைது செய்துள்ளனர். (100)

### புதிய நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப்படுதல் மற்றும் வாகன அணி வகுப்பு என்பன இடம்பெறாது.

எனினும், ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக நாடாளுமன்ற வளாகத்தில் பொலிஸ் கலாசாரப்பிரிவின் பங்களிப்புடன் கலாசார மரியாதை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை வைபவரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வுக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள், பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாளையும், நாளை மறுதினமும் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெறவுள்ளது.

### பல இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணப்பொதியிலிருந்து 6.5 கிராம் நிறையுடையஹெரோயின்போதைப்பொருளைப் பொலிஸார் கைப்பற்றியதுடன் சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைப்பற்றிய பல இலட்சம் ரூபா பெறுமதியான 6.5 கிராம் ஹெரோயினையும் சந்தேகநபரையும் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, 2 கிராமுக்கு மேலதிகமான ஹெரோயின் போதைப்பொருளுடன் குற்றம் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் குற்றவாளிகளுக்குக் கடந்த காலங்களில் நீதிமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (100)

# யாழ். பண்ணை பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம் பண்ணை பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்ணை பாலத்துக்கு அருகில்இடம்பெற்ற இந்த விபத்தில் கொக்குவில் கிழக்கை சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகவும் இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இதன்போது சிகிச்சை பலனின்றி மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் மின்சாரசபையினர்!

சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் புதிய பொது முகாமையாளர் அந்த பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தமின் தலைவர் சௌமிய குமாரவடு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இது வரையில் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை மின்சார சபையின் புதிய பொது முகாமையாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை சுகயீன விடுமுறையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக மின்சார பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் புதிய பொது முகாமையாளர் பதவிக்கு கடந்த 14ஆம் திகதி புதிய நபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று நாள்களுக்கு மாத்திரமே எரிபொருள் கையிருப்பில் உள்ளது

## மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே அறிவிப்பு



இலங்கையில் மூன்று நாளகளுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக சிறிலங்கா மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மின்விநியோகத்தை துண்டிக்காமலிருக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டொலர் பற்றாக்குறை காரணமாக சிறிலங்காவிற்கு வந்துள்ள எரிபொருளை தரையிறக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

களனி திஸ்ஸ மின்நிலையத்துக்குத் தேவையான மூவாயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெயை சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியதைத் தொடர்ந்து மின் விநியோகத்தைத் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மின் வழமைக்கு திரும்பியுள்ளதால் மின்விநியோகத்தைத் தற்போதைய நிலையில் துண்டிக்காமலிருக்க அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபைக்கு எரிபொருளை விநியோகிக்க முடியாது என வலுசக்தி துறை அமைச்சரால் குறிப்பிட முடியாது எனவும், நாட்டில் எரிபொருள் இறக்குமதி மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றின் தனியுரிமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, டீசலுடன் இரண்டு கப்பல்கள் சிறிலங்காவிற்கு வந்துள்ள நிலையில் வங்கிகளுக்கு டொலர் விநியோகிக்கப்படாமையால், குறித்த டீசலைத் தரையிறக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் மூவாயிரம் மெற்றிக்தொன் பெற்றோலுடன் கப்பல் துறைமுகத்துக்கு வந்தடைந்த மூன்று நாள்களின் பின்னரே தரையிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 11 ஆம் திகதி வருகை தந்த குறித்த கப்பலிலிருந்த பெற்றோல், கடந்த 14 ஆம் திகதியே இறக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவிற்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்து, அதனைத் தரையிறக்குவதற்கு, குறித்த வெளிநாட்டு நிறுவனத்துக்கு டொலர் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற நிலையில், அந்த டொலரை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், சிறிலங்காவிற்கு எரிபொருளைக் கொண்டு வந்து, நங்கூரமிட்டுள்ள கப்பல்களுக்குத் தொடர்ந்தும் தாமத கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அனுக் அருட்பிரகாசம் பங்குபற்றும் வாசிப்பும் கலந்துரையாடல் நிகழ்வும்

புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் அனுக் அருட்பிரகாசம் கலந்து கொள்ளும் வாசிப்பும் கலந்துரையாடலும் நிகழ்ச்சி நாளை 19 ஜனவரி 2022 புதன்கிழமை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கிலே இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நிகழ்விலே அனுக் அருட்பிரகாசம், அவரால் எழுதப்பட்டு 2021 இல் வெளியாகி, இலக்கியத்துறையிலே உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் மிக்க பரிசுகளிலே ஒன்றான புக்கர் பரிசுக்காக (The Booker Prize) குறும்பட்டியலிடப்பட்ட 6 நாவல்களில் ஒன்றாகிய A Passage North என்ற நாவலில் இருந்து ஒரு பகுதயை வாசிப்பார். அதனை அடுத்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இடம்பெறும் ஒரு கலந்துரையாடலிலும் அவர் பங்குபற்றுவார்.

அனுக் அருட்பிரகாசம் கொழும்பிலே பிறந்த தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர். இவரின் முதலாவது ஆங்கில நாவலாகிய The Story of a Brief Marriage தென்னாசிய இலக்கியத்துக்கான டீ. எஸ். ஸீ விருதை (DSC Prize) பரிசினை வென்றதுடன் டைலன் தோமஸ் பரிசுக்கான (Dylan Thomas Prize) குறும்பட்டியலிலும் இடம் பிடித்தது. இந்த நாவலும், அண்மையில் புக்கர் பரிசுக்காகக் குறும்பட்டியலிடப்பட அனுக் அருட்பிரகாசத்தின் A Passage North என்ற நாவலும் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போதும், போருக்குப் பின்னரும் தமிழ் சமூகத்தினரின் அனுபவங்கள் குறித்தனவாக அமைந்துள்ளன. அனுக் அருட்பிரகாசம் அமெரிக்காவில் இருக்கும் கொலம்பியாப் பல்கலைக்கழகத்திலே தத்துவத் துறையிலே கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

கொவிட் நெறிமுறைகளுக்கு அமைய இடம்பெறும் இந்த நிகழ்விலே அனைவரும் கலந்துகொள்ளும் படி வரவேற்கப்படுகின்றனர்.

# ஏனைய நாடுகளுடனான உறவு மிகவும் மோசமடைந்து விட்டது

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு



நாட்டின் கடன் தரமதிப்பீடுகள் தொடர்ச்சியாகக் குறைக்கப்படுவதால் முதலீட்டாளர்கள் ஊக்கமிழந்துள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

சர்வதேச தரப்படுத்தல் முகவர் நிலையங்கள் சுயாதீனமானவை எனவும் முதலீட்டாளர்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு அவற்றின் மதிப்பீடுகள் மிகவும் முக்கியமானவை எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஹரினி அமரசூரிய, நாடு அந்நிய செலாவணி நெருக்கடிக்கு உள்ளாகி வருவதால் இறக்குமதி செலவுகள் அதிகரித்துள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் விவசாயக் கொள்கை பேரழிவாக மாறியுள்ள காரணத்தால் அடுத்த சில மாதங்களில், அரசாங்கம் பெரிய அளவிலான உணவை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும் ஏனைய நாடுகளுடனான இலங்கையின் உறவு மோசமடைந்துள்ளதாகவும் அதுவும் நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் ஹரினி அமரசூரிய சுட்டிக்காட்டினார்.

# சிறகுகள் அமையத்தின் ஆண்டு ஆரம்ப சந்திப்பு



சிறகுகள் அமையத்தின் ஆண்டு ஆரம்ப சந்திப்பு கடந்த சனிக்கிழமை யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அமையத்தின் 2022ஆம் வருடத்துக்கான செயற்பாடுகளைத் திட்டமிடும் வகையில் அமைந்திருந்தது. சிறகுகள் அமையம் 5 ஆவது வருடத்தில் பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2022இல் வெளியிடப்பெற்றது.